தாடிக்கொம்பு அருகே

புனித சலேத் மாதா தேவாலய திருவிழா

▶ தாடிக்கொம்பு அருகே புனித சலேத் மாதா தேவாலய திருவிழாவில், கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி, சப்பரத்தை முழங்காலிட்டு சுற்றி வந்து சிறப்பு பிரார்த்தனை நடத்தினர்.

திண்டுக்கல், மே 25: தாடிக்கொம்பு அருகே மறவபட்டி புதூர் புனித சலேத் மாதா தேவாலயத்தில் நடந்த ஆண்டு திருவிழாவில், ஆண்கள் மற்றும் பெண்கள் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி, புனித சலேத் மாதா சப்பரத்தை முழங்காலிட்டு சுற்றி வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

திண்டுக்கல்லை அடுத்து தாடிக்கொம்பு அருகே உள்ள மறவபட்டிபுதூரில் 141 ஆண்டுகள் பழமையான புனித சலேத் மாதா தேவாலயம் உள்ளது. இந்த திருத்தலத்தின் 141ம் ஆண்டு திருவிழா கடந்த 13ம் தேதி மாலை நவநாள் நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. இதனைத்தொடர்ந்து ஒவ்வொரு நாள் மாலையும்

மக்கள் முழங்கால் பிரார்த்தனை

புனித சலேத் மாதாவின் திருஉருவம் தாங்கிய கொடி மற்றும் புனித சலேத் மாதா மின் ரதம் ஆகியவை ஜெப மாலை ஊர்வலத்துடன் நடந்தது. இதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த 21ம் தேதி புனித சலேத் மாதா திருவுருவம் தாங்கிய கொடியுடன் ஜெபமாலை ஊர்வலம் நடத்தப்பட்டு, கொடியேற்றம் நடந்தது. 22ம் தேதி இரவு புனித சலேத் மாதா உள்ளிட்ட புனிதர்களின் சொரூபங்களுடன் மின்ரத ஊர்வலம் மற்றும் வாண வேடிக்கை நடைபெற்றது. நேற்று முன்தினம் பகலில் புனித சலேத் மாதா உள்ளிட்ட புனிதர்களின் சொரூபங்கள் ஏற்றப்பட்ட பெரிய தேர் பவனி நடைபெற்றது. பின்னர் புனித சலேத் மாதா சொரூபம் தாங்கிய சப்பரம் திருத்தலம் முன்பாக நிலை நிறுத்தப்பட்டது. விழா முக்கிய நிகழ்வாக, ஆண்கள், பெண்கள் ஏராளமானோர் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி, முழங்காலிட்டு புனித சலேத் மாதாவின் சொரூபத்தை தாங்கிய சப்பரத்தை சுற்றி வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். திருவிழா ஏற்பாடுகளை ஊர் பெரியதனக்காரர்கள் மற்றும் பொது மக்கள் செய்திருந்தனர்.

பத்ம விருதுக்கு விண்ணப்பம் ஜூலை 31 வரை பெறப்படும்

மாவட்ட நிர்வாகம் தகவல்

திண்டுக்கல், மே 25: பத்ம விருதிற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டதாவது: பன்முக திறமைக்கான விருதான பத்ம விருது குடியரசு தினத்தன்று வழங்கப்பட உள்ளது. 2027ம் ஆண்டிற்கு கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல் மற்றும் பொறியியல், பொது நிர்வாகம், சிவில் சேவை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளில் அளப்பரிய சாதனை புரிந்த தகுதியான நபர்களிடமிருந்து கருத்துரு 31.07.2026க்குள் www.awards.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 31.07.2026க்குள் மேற்கண்ட இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்த விபரத்தினை, திண்டுக்கல் மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வேலை என்று கூறி

ரூ.7.50 லட்சம் மோசடி செய்தவர் சிக்கினார்

திண்டுக்கல், மே 25: வெளிநாட்டில் வேலை வாங்கித்தர ஏற்பாடு செய்வதாகக் கூறி, தனியார் நிறுவன ஊழியரிடம் ரூ.7.50 லட்சம் மோசடி செய்தவரை, போலீசார் கைது செய்தனர்.

ஆத்தூர் தாலுகாவை சேர்ந்த விமலன் (28) என்பவர், சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன், வெளிநாட்டில் வேலைத் தேடி சமூக வேலைவாய்ப்பு வலைத்தளங்களில் விண்ணப்பித்திருந்தார். இந்நிலையில், வெளிநாடுகளுக்கு அவுட்சோர்சிங் மூலமாக ஆட்கள் தேர்வு செய்து அனுப்பும் நிறுவனம் நடத்தி வருவதாக கூறிய, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த துரை ஆனந்த் (46) என்பவர், விமலனை தொடர்புக் கொண்டார். அப்போது, அவரது கல்வித்தகுதிக்கு ஏற்றார்போல் சிங்கப்பூரில் இன்ஜினியர் வேலை வாங்கித் தருவதாகவும், இதற்காக சேவைக்கட்டணம், பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் கூறி உள்ளார். இதனை நம்பிய விமலன், அவருக்கு பல்வேறு தவணைகளாக அவரது வங்கி கணக்கிற்கு ரூ.7 லட்சத்து 70 ஆயிரத்து 590ஐ அனுப்பி வைத்தார். அதைத்தொடர்ந்து, வேலைவாய்ப்பு குறித்து அவரிடம் இருந்து எந்தத்தகவலும் இல்லை. இதுகுறித்து கேட்டபோது, முறையான பதிலளிக்கவில்லை என தெரிகிறது. இதனால் அவர் மீது சந்தேகம் அடைந்த விமலன், பணத்தை திரும்ப தரும்படி கேட்டுள்ளார். இதையடுத்து அவரது அலைபேசி எண் சுவிட்ச் ஆப் ஆனது. இந்த மோசடி குறித்து 2024ம் ஆண்டு திண்டுக்கல் சைபர் கிரைம் போலீசில் விமலன் புகார் அளித்தார்.

போலீசாரின் விசாரணையில், துரை ஆனந்த் துபாயில் வசிப்பது தெரியவந்தது. இதையடுத்து, அவரின் பாஸ்போர்ட்டை முடக்கவும், வழக்கு தொடர்பான விவரங்களையும் அனைத்து விமான நிலைய குடியுரிமை அதிகாரிகளுக்கும் லுக்அவுட் நோட்டீசாக போலீசார் அனுப்பினர். இந்நிலையில் வேலை விஷயமாக, துபாயில் இருந்து மும்பை வந்த துரை ஆனந்த்தை குடியுரிமை அதிகாரிகள் பிடித்து மும்பை சஹர் போலீசில் ஒப்படைத்தனர். அங்கிருந்து திண்டுக்கல் சைபர் கிரைம் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். இதன்பேரில், எஸ்.ஐ.க்கள் லாய்டு சிங், கோமதி தலைமையிலான குழுவினர், மும்பை சென்று துரை ஆனந்தை கைது செய்தனர். இதையடுத்து அந்தேரி கோர்ட்டில் ஆஜர்படுத்திய போலீசார், திண்டுக்கல் அழைத்து வந்து சிறையில் அடைத்தனர்.

பாலத்தில் தேங்கிய மழைநீர்...

▶ திண்டுக்கல் பகுதியில் பெய்த மழையால், பாலகிருஷ்ணாபுரத்தில் உள்ள தரைப்பாலத்தில் அதிக அளவில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சின்ன வெங்காயம் விவசாயம்...

▶ சின்னாளபட்டி அருகில் உள்ள நடுப்பட்டி பகுதியில், சின்ன வெங்காயம் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இவை பசுமையுடன் வளர்ச்சியடைந்து விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது.

24 போலீஸ் எஸ்ஐக்கள் பணியிட மாற்றம்

திண்டுக்கல், மே 25: திண்டுக்கல் மாவட்டத்தில் 24 போலீஸ் எஸ்ஐக்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் பல்வேறு போலீஸ் நிலையங்களில் பணியாற்றி வரும் 24 போலீஸ் எஸ்ஐக்களை பணியிட மாற்றம் செய்து போலீஸ் சூப்பிரண்டு பிரதீப் உத்தரவிட்டுள்ளார். இதன்படி வாணி (திண்டுக்கல் அனைத்து மகளிர்) நிலக்கோட்டைக்கும், கார்த்திகேயன் (நத்தம்) திண்டுக்கல் நகர் வடக்குக்கும், பாண்டியன் (தாடிகொம்பு) வடமதுரைக்கும், சரோஜினி (வடமதுரை அனைத்து மகளிர்) சாணார்பட்டி அனைத்து மகளிருக்கும், அனுஷியா (வடமதுரை அனைத்து மகளிர்), திண்டுக்கல் அனைத்து மகளிருக்கும், தமிழரசி (அம்மையநாயக்கனூர்) வடமதுரை அனைத்து மகளிருக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதேபோல் சந்திரன் (ஒட்டன்சத்திரம்) பழநி நகருக்கும், சாந்தி (ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர்) பழநி அனைத்து மகளிருக்கும், லதா (ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர்) பழநி அனைத்து மகளிருக்கும், முரளி (ஆயக்குடி) பழநி அடிவாரத்துக்கும், திருமலைசாமி (பழநி தாலுகா) அம்பிளிக்கைக்கும், சேகர் (சத்திரப்பட்டி) ஆயக்குடிக்கும், வனிதா (பழநி அனைத்து மகளிர்) மாவட்ட குற்றப்பிரிவுக்கும், பிரான்சின் தீபா (கொடைக்கானல் அனைத்து மகளிர்) வடமதுரை அனைத்து மகளிருக்கும் பணியிடம் மாற்றப்பட்டனர்.

இவர்களுடன் ராம்சேட் (திண்டுக்கல் மதுவிலக்கு) பட்டிவீரன்பட்டிக்கும், சரத்குமார் (திண்டுக்கல் வடக்கு) தாடிக்கொம்புவிற்கும், சுப்புராஜ் (அம்பாத்துறை) மாவட்ட குற்றபிரிவுக்கும், கார்த்திகைவேல் (ஆயக்குடி) சத்திரபட்டிக்கும், ராஜகுமரன் (பழநி மதுவிலக்கு) பழநி தாலுகாவுக்கும், கோமதி (சைபர் கிரைம்) கன்னிவாடிக்கும், ஆரோக்கியரோஜர் மில்டன் (எரியோடு) திண்டுக்கல் மதுவிலக்குக்கும், பிரதீப் (பழநி அடிவாரம்) பழநி மதுவிலக்குக்கும், காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டிருந்த ஜெய்கணேஷ் எரியோட்டுக்கும், அபினேஷ் நத்தத்துக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

பழநி கோயிலில்

பெண்களிடம் சில்மிஷம்; கேரள ஆசாமி சிக்கினார்

பழநி, மே 25: பழநி கோயிலில் பெண்களிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட கேரள ஆசாமி கைது செய்யப்பட்டார்.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு நேற்று வாரவிடுமுறை என்பதால் பக்தர்கள் வருகை மிக அதிகமாக இருந்தது. இவர்களில் ஏராளமானோர் அடிவாரம், திருஆவினன்குடி கோயில் உள்ளிட்ட பல வேறு பகுதிகளிலும் தரிசனத்திற்காக குவிந்தனர். இதனால் இப்பகுதிகளில் நேற்று கூட்டம் அதிகளவு இருந்தது. இந்த கூட்ட நெரிசலில் பெண்களிடம் ஒரு ஆசாமி சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனை கவனித்த பொதுமக்கள் அந்த வாலிபரை பிடித்து சரமாரியாக தாக்கினர். பின்னர் அவரை பழநி மலைக்கோயில் அடிவாரம் போலீசாரிடம் ஒப்படைத்தனர். போலீசார் நடத்திய விசாரணையில் அவர் கேரள மாநிலம், கோட்டயத்தைச் சேர்ந்த இம்மானுவேல் (35) என்பது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து போலீசார் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து இம்மானுவேலை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பரோட்டா கொடுக்க தாமதம்

மாஸ்டரை அரிவாளால் வெட்டிய வாலிபர் கைது

பழநி, மே 25: பழநியில் பரோட்டா தாமதமாக கொடுத்ததால், மாஸ்டரை அரிவாளால் வெட்டிய கூலித் தொழிலாளியை போலீசார் கைது செய்தனர்.

பழநி டவுன், சத்யா நகரைச் சேர்ந்தவர் விஜய் (25). இவர் காந்தி ரோட்டில் உள்ள ஹோட்டலில் பரோட்டா மாஸ்டராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் நேற்று இவரது கடைக்கு சங்கிலித்தேவர் சந்து பகுதியை சேர்ந்த கூலித்தொழிலாளியான சிவராமன் (35) என்பவர், பரோட்டா வாங்க வந்துள்ளார். அப்போது தயாரித்த பரோட்ட ஸ்டாக் இல்லாததால், புதிதாக தயாரித்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அவருக்கு பரோட்டா வழங்க தாமதமானது. இதில் சிவராமனுக்கும் பரோட்டா மாஸ்டர் விஜய்க்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த சிவராமன், அரிவாளால் விஜயை சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் படுகாயமடைந்த விஜய் சிகிச்சைக்காக பழநி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த பழநி டவுன் போலீசார், சிவராமனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

▶ கைதான சிவராமன்.

வீட்டினை பூட்டிக்கொண்டு

வெளியூர் போனா தகவல் சொல்லுங்க..!

பழநி, மே 25: வீட்டை பூட்டி விட்டு வெளியூர் சென்றால், அதுகுறித்து அருகில் உள்ள காவல் நிலையத்தில் உரிய தகவல் தெரிவிக்க வேண்டுமென போலீசார் எச்சரித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் திருட்டு சம்பவங்களை தடுக்க, போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இவர்கள் எஸ்ஐக்கள் தலைமையில் பல்வேறு குழக்களாக பிரிந்து, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தொடர் ரோந்து பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனுடன் ஆங்காங்கே தீவிர வாகன தணிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக பொதுமக்களுக்கு போலீசார் பல்வேறு முன்னெச்சரிக்கை அறிவுரைகளை வழங்கி உள்ளனர். அதன் விபரங்களாவது:

தனியாக உள்ள வீடுகளில் வசிப்பவர்கள், அருகில் இருக்கும் 5 வீட்டுக்காரர்களின் செல்போன் நம்பர்களை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவரச அழைப்புகள் வந்தால், அந்த எண்களில் இருப்போர் உங்கள் வீட்டிற்கு 5 நிமிடங்களுக்குள் வரமுடிந்தவராக இருக்க வேண்டும். மேலும் உங்கள் பிரச்னையை தெரிவித்தால், அதுகுறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று, அவர்களிடம் சொல்லி வைத்திருக்க வேண்டும். தனியாக உள்ள வீடுகளில் முதியவர்களை காவலுக்கு வைத்து விட்டு பகல் மற்றும் இரவு நேரங்களில் வெளியில் செல்லக்கூடாது.

அதேபோல் வீடுகளை பூட்டிக்கொண்டு வெளியூர் செல்வதாக இருந்தால், அவற்றின் உரிமையாளர்கள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்து விட்டுச்செல்ல வேண்டும். தனியாக உள்ள வீடுகளில் நாய் வளர்ப்பது நல்லது. இரவு நேரங்களில் அந்த நாயை கட்டிப்போட்டு வைத்திருக்கக் கூடாது. குடியிருப்பு பகுதிகளுக்குள் வரும் புதிய நபர்கள் குறித்து நேரடியாக விசாரிக்க வேண்டும். அவர்களது பேச்சு மற்றும் நடத்தையில் சந்தேகம் இருந்தால் உடனடியாக பக்கத்து வீட்டுக்காரர்கள் மற்றும் போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு போலீசார் அறிவுரை

தனியாக அமைந்திருக்கும் வீடுகளில் வசிக்கும் அனைவரும், வீட்டிற்குள் அந்நிய நபர்கள் புகுந்தால் அவர்களிடம் இருந்து தற்காத்துக் கொள்வதற்கு மிளகாய் பொடிகளை பயன்படுத்தலாம்.

இதற்காக அதனை சரியான இடத்தில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களது ஆண்ட்ராய்டு செல்போனில் காவலன் செயலியை பதிவிறக்கம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். தனியாக உள்ள வீடுகளில் அதிக பணம் மற்றும் நகைகளை வைத்திருக்காமல், வங்கிகளில் உள்ள லாக்கர்களில் அவற்றை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு போலீசாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொடைரோடு அருகே

ஐம்புதுரை அம்மன் கோயில் திருவிழா

முளைப்பாரி சுமந்த பெண்கள்

நிலக்கோட்டை, மே 25: கொடைரோடு அருகே உள்ள ஐம்புதுரைக்கோட்டையில் நூற்றாண்டு பழமையான அருள்மிகு ஸ்ரீ ஐம்புதுரை அம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலின் வைகாசி திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கி பக்தர்கள் பங்கேற்புடன் வெகு விமர்சையாக நடைபெற்றது. விழாவின் ஒரு பகுதியாக நேற்று அதிகாலை அம்மன் பூங்கரகம் ஜோடித்து உருமி மேளம் முழங்க ஊர் வலமாக அழைத்து வரப்பட்டது. இதனையடுத்து சிறப்பு அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதனைத்தொடர்ந்து தாரை தப்பட்டை வாண வேடிக்கைகள் முழங்க ஏராளமான பெண்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில முளைப்பாரிகளை சுமந்துகொண்டு ஊர்வலமாக வந்து அம்மன் வள்ளி பாட்டு பாடியும், கும்மி அடித்தும் அம்மனை வழிபட்டனர். இதன் தொடர்ச்சியாக ஏராளமான பக்தர்கள் மாவிளக்கு வைத்தும், பொங்கலிட்டும் வழிபாடுகள் நடத்தினர்.

திரளான பக்தர்கள் நேர்த்திக்கடனாக பால்குடம், தீச்சட்டி எடுத்தும், கிடாய் வெட்டியும் சிறப்பு பூஜைகள் நடத்தினர். இதில் திண்டுக்கல் மட்டுமின்றி மதுரை, கோவை நெல்லை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

▶ கொடைரோடு அருகே ஐம்புதுரை அம்மன் கோயில் வைகாசி திருவிழாவை முன்னிட்டு, ஏராளமான பெண்கள் முளைப்பாரி எடுத்து வந்தனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே. மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: 2 ஆவது தளம், டிகேஸ் டவர்ஸ், எண்.P/V45/4, தேனி- கம்பம் மெயின்ரோடு, டீன்ஹிபி எதிரில், பழனிச்செட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு-625531

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமாமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/ உ3-கடன்தாரர்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின்** (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீதோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமாமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில்** மின்-ஏலம் மூலமாக 11.06.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீதோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத்தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HF0494H20100208 & LAP0494200000005008889 & LAP0494200000005049543 முல்லைசெல்வி P (கடன்தாரர்), பழனியம்மாள் P (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 07.06.2025 மொத்த நிலுவைத் தொகை: 15,75,648.00/– (ரூபாய் பதினைந்து லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்தெட்டு மட்டும்) அதில், கடன் எண்.HF0494H20100208 இன்படி ரூ. 8,08,950/– & LAP0494200000005008889 இன்படி ரூ.2,64,479/– & LAP0494200000005049543 இன்படி ரூ.5,02,219/– ஆகியவை மற்றும் அனுடன் கூட உள்ளடங்கும். கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு முறையே 15.85% &16.35% &15.85% வட்டி.	கையக சுவாதீனம்	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையம் சார் பதிவு அலுவலகம், கோகிலாபுரம் கிராமம், வார்டு எண்.2, மேற்கு தெரு, பட்டா எண்.837, பழைய சர்வே எண்.41, துணைப் பிரிவின்படி புதிய சர்வே எண். 629/18 பகுதி, மறு சர்வே எண். 629/18a, பழைய கதவு எண்.23, புதிய கதவு எண்.22 ஏ இல் உள்ள 777 ச.அடி (கிழக்கு–மேற்கு: 42 அடி, தெற்கு–வடக்காக மேற்கு பக்கம்: 16அடி, கிழக்குப் பக்கம்: 21 அடி) பரப்பளவு உள்ள நிலத்தில் விண்ணப்பதாரர் கூரையுள்ள வீட்டு கட்டிடம் கட்டியுள்ளார். அதில் மின்சார இணைப்பு உள்ளது. மனையின் வடக்கு பகுதியில் பொதுச்சுவர் உரிமை, சொத்தின் கிழக்கு பக்க தெருவுக்குச் செல்லும் நடைபாதை உரிமையுடன் வழக்கமான பாதை உரிமைகளுடன் அனைத்து வசதிகளும் உடையதாக உள்ளது. மனையின் எல்லைகள்: கிழக்கில்: தெற்கு வடக்கு சந்து, மேற்கில்: செல்வன் மற்றும் பிறருக்குச் சொந்தமான மீதமுள்ள வீடு, வடக்கில்: செல்வன் மற்றும் பிறருக்குச் சொந்தமான மீதமுள்ள வீடு, தெற்கில்: கிழக்கு–மேற்கு சாலை.	Rs. 1250000.00/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	Rs. 125000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்து தாயிரம் மட்டும்)	10-06-2026 Before 5 PM	10,000/-	01-06-2026 (11AM – 4PM)	11-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீதோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதார்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கர்தயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்கள்/ஏலதார்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள ஏலதார்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் ப்ரசீட்ஸ் அக்கவுண்ட், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜிஜிஜிஜ பேங்க் லிமிடெட், பன்ஜ்சில் டெக் பார்க், கணபதி ஸௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் எண் (G) இல் 10.06.2026 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதார்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். **அவற்றின் மூல பிரதியை 2வது தளம், டிகேஸ் டவர்ஸ், எண்.பி/1/45/4, தேனி–கம்பம் பிரதான சாலை, டீன்ஹிபி எதிரில், பழனிச்செட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு–625531, மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி** baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உ3 – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமின்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 (பதினைந்து) நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 25.05.2026, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

890415677 7

9.30 AM - 6.00 PM